**இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் - 2015**

---

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்தும் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கிணங்க (ISSAI 1000 -1810) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலைமைக்கூற்று, விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பான எந்தவொரு சீராக்கலையும் மேற்கொள்வதற்கான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதுள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 அபிப்பிராய மறுப்பு**

---

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதுமானதும் உசிதமானதுமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.2.1 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள்**

---

கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியான வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனிக்கு உரித்தான பங்குகளில் 62.45 சதவீதம் கூட்டுத்தாபனத்திற்கு உரியதாயினும், 2015 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

---

(அ) கூட்டுத்தாபனம் புதிய வியூக அமைப்பிற்குள்ளாக்கப்பட்டதன் காரணமாக சொத்துக்களை மீளப் பெறுமதியிடும் தேவையிருந்தது. எனினும், ரூபா 15,392,480 பெறுமதியுடைய 08 வாகனங்கள் மீளப்பெறுமதியிடப்பட்டு தற்போதைய சந்தை விலையில் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 1964 மற்றும் 1977 ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்ட 5718 ஏக்கர் காணி, கட்டிடங்கள், தொழிற்சாலை என்பவற்றைப் பெறுமதியிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச வங்கியொன்றினது 2 கடன் கணக்குகள் மற்றும் நடைமுறைக் கணக்கொன்றின் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்த மீதிகளை உறுதிப்படுத்தலின் பிரகாரம் வங்கிக் கடனுக்கான வட்டி மற்றும் மேலதிகப்பற்று வட்டி என்பவற்றினது கூட்டுத்தொகை ரூபா 6,805,093 ஆகும். எனினும், நிதிக்கூற்றுக்களில் அக்கடனுக்கான வட்டியும் மேலதிகப்பற்று வட்டியும் ரூபா 15,271,328 ஆகக் கணக்கிடப்பட்டமையால் வங்கிக் கடன் வட்டியும் மேலதிகப்பற்று வட்டியும் ரூபா 8,466,235 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நாட்குறிப்புகள் இரண்டின் மூலம் நிறுத்தி வைத்த சம்பாத்தியக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டியதும் செலவு வைக்கப்பட வேண்டியதுமான முறையே ரூபா 3,388,010 மற்றும் ரூபா 19,752,464 என்பவற்றை அக் கணக்குகளில் பதிவு செய்யாமையாலும் மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 1,728,000 பங்கிலாபம் விரிவான வருமானக்கூற்றில் சீராக்கல் செய்யப்படாமையாலும் நிதிக்கூற்றுக்களின் இணக்கத்தன்மை கணக்காய்வில் கேள்விக்குரியதாகியது.

(இ) மன்னார் மாவட்டத்தில் உள்ள புளியடி இறக்கம் எனும் இடத்தில் உள்ள களிமண் மற்றும் சுண்ணாம்புப் பாறைகளுடன் கூடிய 604 ஏக்கர் காணி நெடுங்காலக் குத்தகையின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ள போதும், காணியின் உரித்தை உறுதி செய்து அதனைக் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த வர்த்தகக் கொடுப்பனவுகளது அதிகரிப்பு ரூபா 24,814,414 ஆகும். எனினும், காசுப்பாய்ச்சல் கூற்றில், செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாகிய காசுப்பாய்ச்சலில் அடங்கிய தொழிற்படு மூலதனத்தின் வித்தியாசத்தைச் சீராக்கல் செய்யும் பொது அவ்வதிகரிப்பு ரூபா 11,226,932 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) நெடுங்கால மற்றும் குறுகிய காலக் கடனைப் பெறுதல் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தல் என்பவற்றினது நிகர பெறுமதி ரூபா 4,580,014 ஆகும். எனினும், காசுப்பாய்ச்சல் கூற்றினது நிதிச் செயற்பாட்டில் அந்நிகர பெறுமதியானது ரூபா 1,819,094 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) நிதி நிலைமைக் கூற்றில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றினது பெறுமதி ரூபா 19,909,145 ஆகிய போதும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 29,408,442 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தின் கூட்டுத்தொகையான ரூபா 516,185 கணக்கிலிடப்படவில்லை.

(ஏ) கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பேரேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆயினும், அப்பேரேட்டில் உள்ள நிறுத்திவைத்த சம்பாத்தியக் கணக்கு அந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்படாது பேரேட்டுக் கணக்கில் பதிவு தனியாக எழுதப்பட்டு பேரேட்டுக் கணக்கில் ஓட்டப்பட்டிருந்தமையால் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பேரேட்டுக் கணக்கின் பிழையற்ற தன்மையை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் ஆண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறான நானாவித முற்பணக் கணக்கு மீதி ரூபா 245,946 ஆகும். கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட முற்பணப் பதிவேட்டின் பிரகாரம் அம் மீதி ரூபா 116,336 ஆகியமையால் ரூபா 129,610 வித்தியாசம் நிலவியது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் 04 பேரேட்டுக் கணக்குகளில் உள்ள இறுதிக் கணக்கு மீதிக்கும் ஆரம்ப மீதிக்குமிடையே ரூபா 3,770,794 வித்தியாசம் நிலவியது.

(இ) நிதிக்கூற்றின் பிரகாரம், உரிமை மூலதனக் கூற்றில் நிறுத்தி வைக்கப்பட்ட சம்பாத்தியத்தின் பெறுமதி ரூபா 337,660,694 ஆகும். அப்பெறுமதியானது நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 337,313,622 ஆகக் காட்டப்பட்டமையால், ரூபா 347,072 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) அரச வங்கி ஒன்றில் உள்ள நடைமுறைக் கணக்கில் காசேட்டின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 148,601 ஆகும். ஆயினும் அப்பெறுமதியானது நிதி நிலைமைக் கூற்றில் 1,696,150 ஆகக் காட்டப்பட்டமையால் ரூபா 1,548,089 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு முடிவுத் திகதியன்று உள்ளவாறான வர்த்தக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதி ரூபா 80,551,270 ஆகும். அதில் ஓராண்டிற்குக் குறைவான மீதியான ரூபா 8,245,359 தொகை 1 முதல் 3 ஆண்டுகள் வரையான ரூபா 14,323,896 கடன் மீதி, 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதியாகிய ரூபா 57,982,015 என்பன உள்ளடங்கியிருந்தன. இக்கடன் மீதிகளை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு முடிவு தினத்தில் உள்ளவாறான வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவு செய்ய வேண்டிய பொறுப்புகளது மீதி ரூபா 93,330,134 ஆகும். அதில் ஓராண்டிற்குக் குறைவான மீதியாகிய ரூபா 41,640,831 தொகை 1 முதல் 3 ஆண்டுகள் வரையிலான ரூபா 22,459,105 கடன்மீதி, 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதியாகிய ரூபா 29,230,198 என்பன உள்ளடங்கியிருந்தன. கொடுப்பனவு செய்ய வேண்டிய இக் கடன் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு கணக்கீட்டு விடயத்திற்குமெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கொடுக்கல் வாங்கல்களது பிழையற்ற தன்மையைக் கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது எற்றுக்கொள்ளவோ முடியவில்லை.

| **கணக்கீட்டு விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்று** |
|---|---|---|
| | **ரூபா** | |
| காணியும் கட்டிடங்களும் | 775,295,981 | நிலையான சொத்துப் பேரேடு |
| மோட்டார் வாகனங்கள் | 15,392,480 | மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 5,512,601 | |
| உபகரணங்களும் ஊடக உபகரணங்களும் | 1,194,398 | |
| **இறுதிக் கையிருப்பு -** | | |
| கொங்கிரீட் உற்பத்தி | 6,104,684 | |
| யாழ்ப்பாணம் - சீமெந்துக் கையிருப்பு | 501,461 | |
| நீண்டகாலக் கடன் | 56,293,352 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |

### 2.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2009 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு | உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்க வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாகிய ரூபா 11,548,263 அனுப்பி வைக்கப்படவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2) | பெறப்பட்ட முற்பணமானது குறித்த பணி முடிவடைந்தவுடனேயே தீர்த்து வைக்கப்பட வேண்டுமாயினும், ரூபா 83,836 கூட்டுத் தொகையுடைய முற்பணம் 2 முதல் 3 ஆண்டுகளாகத் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு, 6 மாதங்கள் கடந்துவிட்ட ரூபா 390,485 பெறுமதியான இரண்டு காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 751 | பொருட் பதிவேட்டை நிறுவனம் பேணியிருக்க வில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 756(1) | 2015 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வுச் சபையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) நிதிப்பிரமாணம் 757(4) | நிதியாண்டு முடிவடைந்தவுடன் தமது சொத்துக்கள் தொடர்பாக மெய்மையாய்வை மேற்கொண்டு அவ்வறிக்கையைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| **(இ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றிக்கை** | |
| (i) 5.1.3 ஆம் பிரிவு | பணிப்பாளர் சபை அங்கீகரித்த கூட்டிணைந்த திட்டத்தின் நாளதுவரையாக்கப்பட்ட பிரதிகள் பாதீட்டுடன் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி, கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 8.3.9 ஆம் பிரிவு | அரச கூட்டுத்தாபனங்கள், சபைகளது வளங்கள் என்பன வரிசை அமைச்சினது நடவடிக்கைகளுக்கு |

| | |
|---|---|
| | வழங்கப்படலாகாது. எனினும் 2011 சனவரியில் ரூபா 4.8 மில்லியனுக்குக் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட கெப் வண்டி கொள்வனவு செய்யப்பட்ட நாள்முதலாக கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) 2015 ஜுலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றிக்கையின் 02 ஆம் பிரிவு | பயன்படுத்தப்படுவதிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருந்த இரண்டு மோட்டார் வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது அவை செயலாற்ற நிலையில் இருந்தன. |

### 2.2.8 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் சுற்றுலா ஒன்றிற்கு முறையான அங்கீகாரமின்றி ரூபா 1,100,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனம் 74 நாட்குறிப்பு உறுதிச் சான்றுகளைத் தயாரித்திருந்தபோதும், அந்நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களில் 73 அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த புத்தளத்திலுள்ள பாலாவியில் அமைந்துள்ள 221 ஏக்கர் காணியில் 50 ஏக்கர் முறையான அங்கீகாரமின்றி 2005 ஆம் ஆண்டின்போது முதலீட்டுச் சபை செயற்திட்டம் ஒன்றிற்குச் சுவீகரிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது நிதிசார் விளைவு ரூபா 4,344,849 மிகையானதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 13,792,672 ஆக இருந்தது. இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 18,137,521 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் ரூபா 19,752,464 ஆன மூன்று கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள் பதிவழிக்கப்பட்டமையே மேற்படி அதிகரிப்பிற்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டுகளினதும் நிதிசார் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது 2011 ஆம் ஆண்டில் நிகர இலாபம் ரூபா 2,600,000 ஆகியபோதும், 2012 முதல் 2014 வரை தொடர்ச்சியாக நிகர நட்டமும் மீண்டும் 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 4,344,849 நிகர இலாபமும் ஏற்பட்டிருந்தன. ஊழியர்களது ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி, நடைமுறை அல்லாச் சொத்துக்களுக்கான தேய்மானம் ஆகியவற்றைக் கருத்திற்கொள்ளுமிடத்து கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பானது 2011 ஆம் ஆண்டின்போது ரூபா 33,720,000 சாதகமான பெறுமதியாகவிருந்ததுடன் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மறைப் பெறுமதிகளைக் கொண்டிருந்தன. மீண்டும் 2015 ஆம் ஆண்டில் சாதகமான ரூபா 38,344,849 பெறுமதியுடன் அது அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது நடைமுறை விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 58 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் விரைவு விகிதமும் 87 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. நடைமுறைச் சொத்துக்களைவிட நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 113,564,793 இனால் அதிகரித்தமையால், நடைமுறைப் பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்குப் போதிய திரவத்தன்மை இல்லாது கூட்டுத்தாபனத்தின் திரவத்தன்மை நலிவான மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) முன்னைய ஆண்டில் ரூபா 285,657,759 ஆகவிருந்த விற்பனை வருமானம் மீளாய்வாண்டில் ரூபா 40,570,803 வரை ரூபா 245,086,956 இனால் குறைவடைந்திருந்தது. 2014 திசெம்பரின் பின்னர் 2015 ஜுலை வரை நிதி நெருக்கடி காரணமாக சீமெந்து இறக்குமதி செய்யப்பட முடியாமை, கடன் அடிப்படையில் சீமெந்தை விற்பனை செய்வது முற்றாக நிறுத்தப்பட்டு, அரச நிறுவனங்களில் வழங்குநர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளோருக்கு அந்தக் கட்டளைகள் விற்பனைகள் செய்யப்பட்டமையுமே இவ்வாறாக விற்பனை வருமானம் குறைவடைந்தற்கான பிரதான காரணமாகும்.

(இ) முன்னைய ஆண்டின் மொத்த இலாபமாகிய ரூபா 4,779,245 மீளாய்வாண்டில் ரூபா 10,210,679 மொத்த நட்டமானது சீமெந்து உற்பத்திப் பிரிவின் மேந்தலைக் கிரயம் அதிகரித்திருக்க, விற்பனையானது பெறுமளவில் குறைந்தமையே மொத்த நட்டத்திற்கான பிரதான காரணமாகும். அவ்வாறாக மொத்த நட்டம் ஏற்பட்டிருந்த போதும், பணிப்பாளர் சபையினது தீர்மானத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட ரூபா 16,364,454 முன்னைய ஆண்டிற்கான சீராக்கலை ஏனைய வருமானத்தின் கீழ் காட்டியதன் மூலம் ரூபா 4,344,849 நிகர இலாபம் பெறப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1959 சனவரி 2 ஆந் திகதிய 11634 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம், சீமெந்து உற்பத்தி, இறக்குமதியும் விற்பனையும், சீமெந்து உற்பத்திப் பொருட்களது விற்பனை அல்லது சீமெந்துக் கொங்கிரீட் தந்திக் கம்பங்கள், தொலைபேசிக் கோபுரங்கள், நீரைக் கொண்டு செல்லும் உபகரணங்கள், ஹியூம் குழாய்கள் மற்றும் தரைஓடுகள் உற்பத்தி, எந்தவொரு நபருக்கும் இலத்திரனியல் வலுவை மொத்தமாக வழங்குதல் என்பன கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கங்களாகும்.

மேற்படி நோக்கங்களை ஈடேற்றுவது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீமெந்தை உற்பத்தி செய்து விற்பனை செய்தலும் சீமெந்தோடு இணைந்த உற்பத்திகள் என்பன கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கமெனினும், கடந்த யுத்தச் சூழ்நிலையில் காங்கேசன்துறை சீமெந்து உற்பத்தி நிறுத்தப்பட்டது தொடக்கம் தற்போதைய கால கட்டம் வரை சீமெந்துப் பைகளை இறக்குமதி செய்து விற்பனை செய்வது மற்றும் கொங்கிரீட் உற்பத்திகளது விற்பனை வரை நிறுவனத்தின் ஆரம்பப் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டினது கூட்டிணைந்த திட்டத்துடனும் செயல் நடவடிக்கைத் திட்டத்துடனும் செயல் முன்னேற்ற அறிக்கையை ஒப்பிடும்போது உண்மையான செயற்பாட்டை ஒப்பிடும் விதத்தில் அவ்வறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின்போது ரூபா 574,892,000 பெறுமதியான சீமெந்தை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ரூபா 42,060,062 பெறுமதியான சீமெந்து மாத்திரமே விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, எதிர்பார்த்த இலக்கின் 7.3 சதவீதமே அடையப்பட்டது.

(ஈ) கொங்கிரீட் கம்பங்களுடன் இணைந்த உற்பத்திப் பொருட்களின் மூலம் ரூபா 12,000,000 வருமானம் பெறலாம் என இலக்கிடப்பட்ட போதும், மீளாய்வாண்டின்போது ரூபா 1,026,147 வருமானம் மாத்திரமே அடையப்பெற்றமையால் எதிர்பார்த்த இலக்கின் 8.6 சதவீதத்தையே அடைய முடிந்தது.

(உ) காங்கேசன்துறை கொங்கிரீட் உற்பத்தி மற்றும் விற்பனைப் பிரிவின் மொத்த வருமானத்தை விடக் கூடுதலாகச் செலவு ஏற்பட்டமையால் அது தொடர்ச்சியான நட்டத்திற்குள்ளாகியிருந்தது. கடந்த ஒன்பது ஆண்டுகளின் போதான நட்டத்தைப் பரிசீலிக்கையில் ரூபா 30,298 முதல் ரூபா 19,526,633 வரையிலான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஊ) கூட்டிணைந்த திட்டத்தில் இலக்கிடப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் மீளாய்வு செய்து திருத்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததுடன், கூட்டிணைந்த திட்டத்தில் மீளாய்வாண்டிற்கான மொத்த இலக்கிடப்பட விற்பனை வருமானம் ரூபா 613,662,000 ஆகும். எனினும், உள்ளவாறான வருமானம் ரூபா 67,235,628 ஆகும். அதற்கமைய, இலக்கிடப்பட்ட வருமானத்தில் 11 சதவீதம் மாத்திரமே பெறப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் சீமெந்து இறக்குமதி 17,500 மெட்ரிக் தொன் குறைவாகும். இதனால் ரூபா 245.08 மில்லியனால் விற்பனை வருமானம் குறைவடைந்திருந்தது.

(எ) 2015 ஆம் ஆண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முத்துராஜவெல புதிய சீமெந்தைப் பொதியலடைக்கும் தொழிற்சாலையை அமைப்பதன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்துக் கையிருப்பைப் பொதியிலடைத்து விற்பனை செய்வதன் மூலம் ரூபா 2,055 மில்லியன் விற்பனைக் கிரயத்தையும் 148,500 மில்லியன் மெட்ரிக் தொன் உற்பத்தி இயலளவையும் இலக்காகக் கொண்டிருந்தபோதும், கூட்டிணைந்த திட்டத்தில் அந்நோக்கம் உள்ளடக்கப்பட்டிராததுடன், ஆண்டின் இறுதியில் எதிர்பார்த்த இலக்கு எதனையும் அடைவதற்குத் திட்டம் செயற்படுத்தப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1995 ஆம் ஆண்டின் போது அறுவக்காலில் உள்ள 5352 ஏக்கரிலான சுண்ணாம்புப் பாறையிலிருந்து சீமெந்து உற்பத்திக்கான சுண்ணாம்புப் பாறையைத் தோண்டுவதற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு 50 ஆண்டுகால குத்தகைக்கு அதனைக் கூட்டுத்தாபனம் வழங்கியிருந்தது. குத்தகை உடன்படிக்கையின் படி மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய வருடாந்த வாடகையாகிய ஐ.அ.டொலர் 202,000 இற்குச் சமமான தொகை ரூபா 26,664,825 ஆகும். எவ்வாறாயினும், கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கையில் வருடாந்தக் குத்தகை வாடகை மீளாய்வு செய்யப்படுவது தொடர்பான பிரிவு உள்ளடங்காமையால், 2011 ஆகஸ்ட் 16 ஆந் திகதி நடைபெற்ற பாராளுமன்ற பொது முயற்சிகளுக்கான குழுக் கூட்டத்தில் இவ்வுடன்படிக்கையை மீளாய்வு செய்யுமாறு அறிவுரை வழங்கப்பட்டபோதும், அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மன்னார் மாவட்டத்தில் உள்ள புளியடி இறக்கத்தில் அமைந்துள்ள 604 ஏக்கர் காணியில் 10 ஏக்கர் நானாட்டான் பிரதேச செயலாளரால் இடம் பெயர்ந்த குடும்பங்களை அமர்த்துவதற்காக வழங்கப்பட்டிருந்தது. அத்துமீறிய இக் குடியேற்றம் தொடர்பாகப் பரிசீலித்து காணிப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 1967 ஜுலை 12 ஆந்திகதிய 14756/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கொள்ளுப்பிட்டியில் உள்ள 89.9 பேர்ச்சஸ் காணியை அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையியல் மீளாய்வுக் குழுவினது பரிந்துரையின் பேரில் வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவருக்கு நெடுங்காலக் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக நிதிக்கூற்றுக்களின் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனினும், அது தொடர்பாகப் பரிசீலனை செய்தபோதும், இந்நெடுங்காலக் குத்தகை தொடர்பாக முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொள்ளாதிருந்தமை தெரியவந்தது.

(ஈ) பிரதேச செயலகத்தால் காலியில் உள்ள உனவட்டுன கெஸ்பேபான எனும் இடத்தில் அமைந்துள்ள ஏறக்குறைய 6 ஏக்கர் காணியில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகளை நிர்மாணித்து அவர்கள் அங்கு குடியேறியிருந்தனர். கூட்டுத்தாபனத்திற்கு உரிய இக்காணியின் உரித்தைத் தீர்த்து வைப்பதற்கு அல்லது இழப்பீட்டைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) புத்தளத்தில் உள்ள பாலாவியில் 09 ஏக்கர் காணியில் அத்துமீறிய குடியேற்றவாசிகள் வீடுகளை நிர்மாணித்திருந்தனர். இது தொடர்பாக ஆராய்ந்து உரித்தைத் தீர்த்து வைப்பது தொடர்பாக முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

## 4.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மதீப்பீட்டுப் பெறுமதி கணக்கிலிடப்படாத காங்கேசன்துறையில் அமைந்துள்ள 741 ஏக்கர் தொழிற்சாலையுடன் கூடிய காணி மற்றும் ரூபா 395,000 பெறுமதியான கட்டிடத் தொகுதி என்பன அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இராணுவத்தின் வசம் நெடுங்காலமாகப் பயனற்றிருப்பது அவதானிக்கப்பட்டது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1981 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட சீமெந்துக் கம்பனியின் 62.45 சதவீதமான பங்குகள் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமானதாகும். எனினும், அம் முதலீட்டின் மூலம் கடந்த 25 வருடங்களின் போது கூட்டுத்தாபனத்திற்கு நலன் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) சர்வதேசக் கம்பனி ஒன்றிற்கு இழப்பீடு வழங்குவதற்காக 2012 ஆம் ஆண்டின்போது அரச வங்கி ஒன்றிலிருந்து பெற்றுக் கொண்ட ரூபா 38,704,668 வங்கிக் கடனுக்கு மீளாய்வாண்டினது முடிவளவில் ரூபா 10,066,774 கூட்டுத்தொகை கடனுக்கான வட்டியாக வழங்கப்பட்டிருந்தது.

## 4.5 பதவயணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 76 ஆகும். உள்ளவாறான பதவியணி 53 ஆகும். 23 வெற்றிடங்கள் நிலவின. இவ்வெற்றிடங்கள் காரணமாக உள்ளகக் கட்டுப்பாடு, வேலைப் பகிர்வு, உள்ளகப் பரிசோதனை, உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் என்பன வினைத்திறனுடன் நடைபெறாமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஆரம்பத் தகைமைகளைக் கொண்டிராத ஒருவர் 2012 ஆம் ஆண்டின்போது விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தராக ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். அங்கீகரிக்கப்பட்ட வரம்பிற்கு அதிகமாகக் கடன் விற்பனையில் சீமெந்தை அவர் விற்பனை செய்தமையால் ரூபா 6 மில்லியனுக்குக் கூடுதலான இழப்பு ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக, 2015 நவம்பர் 04 ஆந் திகதி முதல் அவரது சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட இழப்பை அறவிடுவதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்குப் புகார் செய்யப்பட்டபோதும், அவ்விழப்பை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 நவம்பர் 04 ஆந் திகதி தொடக்கம் வெற்றிடமாக உள்ள விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தருக்கான பதவிக்குப் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) மீளாய்விற்குரிய 5 ஆண்டுகளின் போது பதவியணியினரின் எண்ணிக்கை குறைந்திருந்த போதும், மொத்த ஊழியர் கிரயமானது 2011 ஆம் ஆண்டில் ரூபா 24,410,000 ஆகவிருந்து 2015 ஆம் அண்டளவில் ரூபா 29,840,000 வரை ரூபா 5,430,000 இனால் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது. அதற்கமைய, ஊழியர் ஒருவருக்கான சராசரிக் கிரயம் 2011 ஆம் ஆண்டில் ரூபா 358,970 தொடக்கம் 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 563,018 வரை அதிகரித்திருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவிற்கேற்ப நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கையும் கணக்காய்வின் பொருட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2016 திசெம்பர் 31 வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் திட்டமிடப்பட்ட காலப்பகுதியின் போது நிறைவேற்றப்படக்கூடிய நோக்கங்களும் இலக்குகளும் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் தெளிவுறக் காட்டப்படவில்லை.

(ஆ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பிரிவின் பிரகாரம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை செயல்முன்னேற்ற அறிக்கை பணிப்பாளர் சபையால் மீளாய்வு

செய்யப்பட்டிருக்கவில்லை. காலாண்டு முடிவடைந்து 30 நாட்களுக்கு முன்னர் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் பொதுத் திறைசேரிக்கும் அதனைச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், கூட்டுத்தாபனம் அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்திற்கமைய உள்ளடக்கப்பட வேண்டிய துறைகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதும், அதற்கேற்ப கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. பிரதானமாக, பௌதீகக் கையிருப்பைக் கணிப்பிடுவதற்கான கணக்காய்வு நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் ஒரு பெண் உத்தியோகத்தரே இருந்தார். போதியளவு பதவியணியினர் இல்லாமையால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் முறையாகப் பேணப்பட முடியாமல் இருந்தன.

## 5.4 கணக்காய்வுக் குழு

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வுக்குழு கூட்டங்களை நடாத்த வேண்டுமாயினும், 2015 ஆம் ஆண்டின்போது கூட்டுத்தாபனம் 02 கணக்காய்வுக் குழுக்கூட்டங்களையே நடாத்தியிருந்தது.

## 5.5 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

கடன் அடிப்படையில் சீமெந்தை விற்பனை செய்வதற்கான விற்பனை முகவர் பதவியை வழங்கும் போது கடனுக்கு வழங்கப்படும் பெறுமதிக்கு ஈடான பிணைமுறியைப் பெற்றுக்கொள்ளாமை, ஆகக்கூடிய கடன் தொகையை உடன்படிக்கையில் குறிப்பிடாமை, அறவிடுவதற்கான விதிமுறைகள் என்பன உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமை, கடனைச் செலுத்தத் தவறியோருக்கும் தொடர்ந்து கடனுக்கு வழங்குதல்களை மேற்கொள்ளுதல், வங்கிப் பிணை முறிகளுக்குப் போலியான தகவல்களை வழங்குதல், முறையற்றவாறு கடனை அங்கீகரிக்கும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை மற்றும் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி தொடர்பாகத் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளாமை போன்ற குறைபாடுகள் முன்னைய கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டின் முடிவளவிலும் மொத்தக் கடன் மீதியாகிய ரூபா 52,506,824 அறவிடப்படாதிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | நிதிக் கட்டுப்பாடு | முறையான நிதிக்கட்டுப்பாட்டு விதிமுறை அறிமுகஞ் செய்யப்படாமை, குத்தகை மற்றும் வங்கிக் கடன் போன்ற அத்தியாவசிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாமை, வங்கி மேலதிகப்பற்று நிலவுதல். |
| (ஆ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேணாமை மற்றும் மெய்மையாய்வுச் சபையை நியமித்து சொத்துக்களது மெய்மையாய்வை நிறைவு பெறச் செய்யாமை |
| (இ) | களஞ்சியக் கட்டுப்பாடு | கையிருப்பைப் பேணுதல் மற்றும் கையிருப்புப் பதிவேடு மற்றும் புத்தகங்கள் பேணப்படுதல் மற்றும் கையிருப்புகளது இழப்பு மற்றும் தாமதக் கட்டணத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல். |
| (ஈ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | நிறுவனத்தின் அறவிடப்பட வேண்டிய கடன் மீதியை அறவிடாமை, கடன் விற்பனைக்குரிய அறிக்கைகளை முறைமையாகப் பேணாமை மற்றும் கடன் கொடுத்தோருக்கான கொடுப்பனவுகளை வழங்கி அவற்றைத் தீர்த்து வைக்காமை. |